

நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சென்னைகன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் மூலம் நடைபெறும் சாலைப் பணிகள் குறித்த உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட இயக்குநர் ஆர்.செல்வராஜ், நிதித்துறை சிறப்பு செயலாளர் பிரசாந்த் வடநேரே, நிதித்துறை துணைச் செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எம்.கே.செல்வம் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை தெற்கு மாவட்டம்

# மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.கார்த்திகேயன்** (68, பன்னீர் செல்வம் வீதி தெற்கு, ஒத்தக்கால்மண்டபம், கோவை மாவட்டம் - 641 032) அவர்கள் ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.






நாமக்கல் நகராட்சி பூங்கா சாலையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அமைக்கப்பட்டிருந்த எல்லோருக்கும் எல்லாம் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நகர்மன்ற தலைவர் து.கலாநிதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தே.ராம்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) த.வடிவேல், நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!



சென்னை, மார்ச் 16-

தமிழ்நாட்டிற்கு 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1,37,563 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் 2,81,96,899 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து சுற்றுலா ஆணையர் மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021-ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023-ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தற்போது 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1,37,563 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021-ல் 11,53,36,719-ஆக இருந்து 2022-ல் 21,85,84,846 ஆகவும், 2023-ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2,81,96,899 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும் சுற்றுலாத்துறைக்கு தொழில் அந்தஸ்தை வழங்கும் சுற்றுலா கொள்கையை வெளியிட்டுள்ளார். சாகச சுற்றுலா, பொழுதுபோக்கு சுற்றுலா, கேரவன் சுற்றுலா, கிராமப்புற மற்றும் தோட்ட சுற்றுலா, கடலோர சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, MICE சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா மற்றும் திரைப்படச் சுற்றுலா ஆகிய 12 முன்னுரிமை சுற்றுலாப் பிரிவுகள் கண்டறியப்பட்டு சுற்றுலாத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக முக்கிய கவனம் செலுத்தும் அடிப்படையில் பொழுது போக்கு பூங்காக்கள், பாரம்பரிய ஹோட்டல்கள், அனுபவமிக்க ஓய்வு விடுதிகள், சுற்றுச்சூழல் குடிசைகள்/ முகாம்கள், ரோப்வேகள், ஆரோக்கிய ஓய்வு விடுதிகள், ஓசியானேரியம் / மீன்வளம், கோல்ஃப் மைதானம், தோட்டம் / பண்ணை சுற்றுலா திட்டங்கள், அருங்காட்சியகங்கள், சாகச சுற்றுலா திட்டம், குரூஸ் சுற்றுலா திட்டம் மற்றும் கேரவன் சுற்றுலா திட்டம் ஆகிய 13 தகுதியான சுற்றுலாத் திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தங்கள் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தொழில் வாய்ப்புகள் குறித்து, தங்கள் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு தெரிவித்து புதிய சுற்றுலா தலங்களின் உருவாக்கத்திற்கும், மேம்பாட்டிற்கு பணியாற்றிட வேண்டும். சுற்றுலா வளர்ச்சித் திட்டப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள், உலக சுற்றுலா பயணிகளின் விருப்பமான முக்கிய சுற்றுலாத்தலமாக தமிழ்நாட்டை உருவாக்கும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்தார். இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை துணைச் செயலாளர் இரா.வீருசாமி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் ப.புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளை வஞ்சிக்கின்ற ஆட்சி நடத்துகிறார் பிரதமர் மோடி!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!



செஞ்சி, மார்ச் 16-

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தில் கட்டி முடிக்கப்பட்ட பல்வேறு அரசு கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழக துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்.

மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தியில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.11.97லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம், பகுதி நேர ரேஷன் கடை கட்டிடம், சமத்துவ குப்பம் ஊராட்சியில் ரூ 7.43லட்சம் மதிப்பீட்டில் புதிய சமையலறை கட்டிடம், கெங்காபுரம் ஊராட்சியில் ரூ.11.85 லட்சம் மதிப்பீட்டில் இயற்கை உள்ளீட்டு மைய கட்டிடம், காளான் வளர்ப்பு கட்டிடம், தேவந்திரவாடி ஊராட்சியில் ரூ. 28.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடம், நொச்சலூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ 12.30 லட்சம்மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடங்கள் என மொத்தம் ரூ. 71 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர்கள்நெடுஞ்செழியன், பெருமாள், விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் விஜயலட்சுமி ஜெயக்குமார், ராஜா, ஜெயா ராதா கிருஷ்ணன், அன்னபூரணி மணி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 71.77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கு இலவசமாக கேஸ் சிலிண்டரை வழங்கியது தி.மு.க. தலைமையிலான கலைஞர் ஆட்சியில் என்றும் 10ஆண்டு கால பி.ஜே.பி. ஆட்சியில் கேஸ் சிலிண்டரை மூன்று மடங்கு ஏற்றிவிட்டு தேர்தல் வரும் நேரத்தில் ரூபாய் நூறு என குறைத்து விட்டு பெட்ரோல் டீசல் விலையை ஏற்றி ஏழை எளிய மக்களை ஏமாற்றி நம்ப வைத்து மோசடி செய்கின்ற நம்பர் 1ஆக இருப்பவர் பிரதமர் மோடி என்றும் தமிழ்நாட்டு மக்களை பல்வேறு சமூக நலத் திட்டங்கள் மூலமாக காப்பாற்றுவதற்கு நம்பர் 1 முதல்வராக இருப்பவர் மு.க.ஸ்டாலின் எனத் தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆட்சி பொறுப்பேற்ற 33 மாதம் கால ஆட்சியில் விவசாயிகளுக்கு தாய் உள்ளத்தோடு 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு திட்டத்தை வழங்கியும்,விவசாய கடனை தள்ளுபடி செய்தும் பல்வேறு திட்டங்கள் மூலம் விவசாயிகளை பாதுகாக்கின்ற ஆட்சி மு. க. ஸ்டாலின் ஆட்சி என்றும் விவசாயிகளை வஞ்சிக்கின்ற ஆட்சி மோடி ஆட்சி என்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயண மூர்த்தி,சாந்தி சுப்ரமணியன்,ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன்,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர், வேலு வட்டார கல்வி அலுவலர்வெங்கடேசன்,ஒன்றிய கவுன்சிலர்கள் சக்தி,ஒன்றிய நிர்வாகிகள் அர்ஷத், செல்வம், சரவணன், பாலமுருகன், செந்தில்குமார், உதயகுமார், ஆறுமுகம், ஜி.பி. எஸ். முருகன்,எஸ். பி. சம்பத், தோப்பு சம்பத், பெருவளூர் பாபு,அரங்கநாதன்,முன்னாள் கவுன்சிலர் ஜானகிராமன்,மாணவரணி ஆறுமுகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டம்

# ஊத்தங்கரை பேரூர்ச் செயலாளர் இரா.பாபு சிவக்குமார் மறைவு!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அஞ்சலி!



கிருஷ்ணகிரி, மார்ச் 16-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை பேரூர் கழகச் செயலாளர் இரா.பாபுசிவகுமார் நேற்று முன்தினம் (14.3.2024) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துறோம்.

செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று மறைந்த இரா.பாபு சிவக்குமார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர், கழக தலைவர் முதல்வர் ஆகியோருடன் கழகத்தில் பல்வேறு பணிகளை திறம்பட பணியாற்றிய பெருந்தகை.

ஆரம்ப காலத்தில் இருந்து கழகத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு கழகத்திற்காக பணியாற்றியவர். கடந்த காலங்களில் இளைஞர் அணியில் பணியாற்றி பெருமை சேர்த்தவர், ஒன்றிய பொருளாளராக பணியாற்றியவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் 38 ஆண்டு காலமாக தொடர்ந்து ஊத்தங்கரை பேரூராட்சியின் பேரூர் கழக செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர். கடந்த 1986 ஆம் ஆண்டு ஊத்தங்கரை பேரூராட்சி தலைவராக பணியாற்றியவர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு தலைமை கழக பொதுக் குழு உறுப்பினராக பணியாற்றியவர். ஊத்தங்கரை நகர வங்கி தலைவராகவும், ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்றவர் ஆவார்.

இவருக்கு ஞானம்மாள் என்கிற மனைவியும், பா.சோமசுந்தரம், பா.தீபக் என்ற இரு மகன்களும் உள்ளனர்.

### ஊத்தங்கரை

# பேரூர்ச் செயலாளர் பாபு சிவகுமார் மறைவு!

### மாவட்டக் கழகம் இரங்கல்!

கிருஷ்ணகிரி, மார்ச் 16-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ஊத்தங்கரை பேரூர் கழக செயலாளர் மறைவையொட்டி.

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னாடி, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் தளபதி ஆகியோருடன் கழகத்தில் பல்வேறு பணிகளை திறம்பட பணியாற்றிய பெருந்தகை.

ஆரம்ப காலத்தில் இருந்து கழகத்தில் பணியாற்றியவர். கடந்த காலங்களில் இளைஞர் அணியில் பணியாற்றி பெருமை சேர்த்தவர், ஒன்றிய பொருளாளராக பணியாற்றியவர். கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் கடந்த 38 ஆண்டு காலமாக தொடர்ந்து ஊத்தங்கரை பேரூராட்சியின் பேரூர் கழக செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு ஊத்தங்கரை பேரூராட்சி தலைவராக பணியாற்றியவர். கடந்த 1998 ஆம் ஆண்டு தலைமை கழக பொதுக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

ஊத்தங்கரை நகர வங்கி தலைவராக பணியாற்றியவர். ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளராக பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்றவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவே முழு நேரம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு திறம்பட பணியாற்றிய பாபுசிவகுமார் நம்மையெல்லாம் விட்டு பிரிந்து சென்றுள்ளார் என்பதை பார்க்கும்போது மிகுந்த வருத்தம் அடைகிறேன். அவரது பிரிவால் வாடும் அவர்களது குடும்பத்தின ருக்கும், ஊத்தங்கரை பகுதியின் கழகத் தோழர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.103 கோடியில் திட்டங்களை அறிவித்த

# முதலமைச்சருக்கு திருப்பூர் மக்களின் சார்பாக நன்றி!

### மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!



திருப்பூர், மார்ச் 16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து திருப்பூருக்கென 4ம் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம், 843 கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய தார் சாலைகள், முத்தமிழறிஞர் கலைஞர் மத்திய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

13.03.2024 அன்று கோவை மாவட்டம், பொள்ளாச்சிக்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் அமைக்கபடுமெனவும், ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் பெருமாநல்லூர் சாலையில் நல்லாற்றில் புதிய பாலங்கள் கட்டப்படுமெனவும், ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் கிராமப் பகுதிகளில் 8 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் கட்டப்படுமெனவும், ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் 13 புதிய சமுதாய நலக் கூடங்கள், ரூ.4 கோடி மதிப்பீட்டில் பல்லடம் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் எழும்பு முறிவு சிறப்பு மருத்துவமனை என ரூ.103 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டங்களை அறிவித்துள்ளார். இதற்காக திருப்பூர் மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.






மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொது கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன் எம் எல் ஏ சிறப்புரையாற்றினார்.உடன் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் புதுக்கோட்டை விஜயா | சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட கழக அவை தலைவர் கே.ஜி. சீனிவாசன் பொருளாளர் மகா. அலெக்ஸ்சாண்டர், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.என். ரவி, சீர்காழி நகர செயலாளர் மா.சுப்பராயன்மற்றும் மலர்விழி திருமாவளவன், எம்.பி. கென்னடி | காழி. கலைவாணன், துர்கா பரமேஸ்வரி ராஜசேகர் மற்றும் பலர் உள்ளனர்

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வீரவநல்லூர் பேரூரைச் சேர்ந்த எம்.அப்துல்ரகுமான் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், தென்னமாதேவி ஊராட்சியில் பகுதி நேர நியாய விலைக்கடையை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், ஒன்றிய செயலாளர் க.மும்மூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் வனிதா அரிராமன், ஒன்றிய குழு துணை தலைவர் உதயகுமார், ஒன்றிய கவுன்சிலர் ஆறு.சிட்டிபாபு, ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜாமணி ரமேஷ், பாலமுருகன், பாஸ்கர், ஒன்றிய நிர்வாகிகள் அவின். தண்டபாணி, C.காமராஜ், ஆறு.சங்கர், ஜெயா பன்னீர்செல்வம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சதீஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, கிளை செயலாளர் ராஜசேகர், ஜெய்சங்கர், சிவபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.